சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண். 75/2018

பெயர் திரு. அந்தோனி நாள். 14.07.2026
த/பெ. சீமோன்

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) என் தகப்பனார் பெயர் சீமோன் மட்டும் தான். என்னுடைய கிரைய ஆவணத்தில் லூர்து என்பவரின் தகப்பனார் பெயர் சீமோன்சாலமன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.த.சா.ஆ.5 ல் உள்ள என் கிரையதாரரின் வாக்காளர் அடையாள அட்டையில் சாலமன் என்று குறிப்பிடப்பட்டவில்லை என்றால் சரிதான். அதில் உள்ள எனது மற்றும் எனது கிரையதாரரின் வாக்காளர் அடையாள அட்டைகளில் தந்தை பெயரும் சீமோன் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கிரையதார் திருமணம் ஆகாதவர். அந்த வாக்காளர் அடையாள அட்டையில் " லூர்து ரெட்டியம்மாள் " என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புல எண் 296 ல் 78 சென்ட் தவிர்த்து மீதமுள்ள சொத்தை கன்னியாஸ்திரிகள் வாங்கிவிட்டார்.

2) வழக்குரையில் வழக்கு சொத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கில் கன்னியாஸ்திரிகள் இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய சொத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. வழக்கு புல எண்ணில் அதிக விஸ்திரணம் வாங்கியது கன்னியாஸ்திரிகள் என்றால் சரிதான்.

3) 1973ம் ஆண்டு கிரைய ஆவணத்தில் உள்ள அளவுகள் தவறு என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னம்மாள் கணவர் பெயர் எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.1ல் வழக்கு புல எண்ணில் 10 சென்ட் தான் கிரையம் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.5 படி 30 சென்ட் எழுதிவைக்க உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.5 ல் தவறானது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கும்போது சாந்தா பெயரில் 4 சென்ட்டும், லூர்து பெயரில் 32 மற்றும் 37 சென்ட்டும் பட்டா இருந்தது. மற்ற அளவுகள் மடம் பெயரில் பட்டா இருந்தது. கிரையம் வாங்கும்போது சரிபார்த்துதான் வாங்கினேன். 3 சென்ட் தான் சாந்தா பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழக்கப்பட்டது என்றால் சரியல்ல. மொத்தம் 8 ஏக்கர் 72 சென்ட்டிற்கு மரியநாதன், அந்தோனி, ராமகோபால் மற்றும் கன்னியாஸ்திரிகள் மடம் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. சாந்தாவின் கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன்.

4) அது 23.06.1998ல் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையதார் சின்னப்பன் மகன் சப்பிரசாத் என்றால் சரிதான். சாந்தாவின் கிரைய ஆவணத்தில் உள்ள வாசகங்கள் சரிதான். என் கிரையதார் பிறந்து வளர்ந்தது தச்சூர் கிராமம். அவர் எங்கு படித்தார் என்று எனக்கு தெரியாது. அவர் தமிழ் பேசுவார். பி.த.சா.ஆ 5 யை படித்து கேட்டு கையொப்பம் போட்டார். பி.த.சா.ஆ 5ல் ஏன் லூர்து தெலுங்கில் கையொப்பம் செய்தார் என்றால் அவர் தெலுங்கு வழி கல்வி பயின்றதால் தெலுங்கில் கையொப்பம் போட்டார். 1ம் பிரதிவாதி பெயரில் எவ்வாறு பட்டா மாற்றப்பட்டது

என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றபின்பு என்னுடன் சொத்தை பார்வையிட்டார். பி.த.சா.ஆ.7 வழக்கிற்கு பின்னிட்டது என்றால் சரிதான். உடல்நிலை சரியில்லை என்ற காரணம் பி.த.சா.ஆ 7ல் இல்லை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ 7 வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு உரிமையானது என்பதால் தான் பி.த.சா.ஆ 7 எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ஏருவ என்பது குடும்ப பெயர் என்றால் சரிதான்.

5) ஏருவ லூர்து, காதே லூர்து வேறு நபர்கள் என்றால் அவ்வாறு யாரும் இல்லை. லூர்து என்ற பெயரில் சுமார் 5 நபர்கள் உள்ளனர். " லூர்து ரெட்டியார்" ஆண் நபரை குறிக்கும் என்றாலும், " லூர்து அம்மாள்" பெண் நபரை குறிக்கும் என்றாலும் சரியல்ல. லூர்து என்ற பெயரை புனைந்து பி.த.சா.ஆ 5 யை ஏற்ப்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ 5 வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் பெயரில் தவறாக பட்டாவை மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை